**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2020**

**C021 இலக்கணம் – 1 (எழுத்து)**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. சீர்கள் எத்தனை வகைப்படும்?
2. தனிமொழி மகரக் குறுக்கத்தை மெய்ம்மயக்கம் என்று கூற இயலுமா?
3. எழுத்து ஒலி பிறப்பதற்குத் தேவைப்படும் மொத்த உறுப்புகள் எட்டு, இதில் தொல்காப்பியமும் நன்னூலும் உடன்படுகின்றனவா?
4. ஓர் எழுத்து ஒருமொழி என்றால் என்ன?
5. நன்னூலார் எழுத்து இலக்கணத்தை எத்தனை வகையாகப் பிரிக்கிறார்?
6. மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் மொத்தம் எத்தனை?
7. தமிழ் இலக்கண நூலார் குறிப்பிடும் உடம்படுமெய்கள் யாவை?
8. இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் இ, ஐ முன்னர் வரும் வல்லினம் இயல்பாக வருமா? மிக்கு வருமா?
9. உயிரெழுத்து – பிரித்து எழுதுக.
10. பெயர்ச்சொல்லுக்குப் பின்னால் வரும் ஐ உருபு தரும் பொருள் யாது?
11. வினைத்தொகைக்கு ஒரு சான்று தருக.
12. நிலைமொழியின் இறுதியில் உள்ள னகர, லகர மெய்களுக்கு முன் வரும் தகர மெய் எவ்வாறு திரியும்?

13. சொல்லின் ஈற்றில் வரும் மூன்று வினா எழுத்துகள் யாவை?
14. வன்தொடர்க் குற்றியலுகரத்தின் முன் வல்லினம் மிகுமா?
15. குறிப்பு பெயரெச்சத்தை இக்கால மொழியியலார் எவ்வாறு குறிப்பிடுவர்?

**பிரிவு – 2**

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக. (5x3=15)**

1. அகப்பொருள் திணைகள் யாவை?
2. அகச்சுட்டு, புறச்சுட்டு விளக்கம் தருக.
3. எழுத்துப் பிறப்பிற்கு இடமாகும் உறுப்புகளாக நன்னூலார் குறிப்பிடுவன எத்தனை? அவை யாவை?
4. பகுபத உறுப்புகள் எத்தனை ? அவை யாவை?
5. வினை இடைநிலைகள் எத்தனை? அவை யாவை?
6. மீன் என்னும் சொல்லின் இறுதியில் உள்ள நகரமெய் வல்லினம் வர வேற்றுமைப் புணர்ச்சியில் எவ்வாறு புணரும்? சான்று தருக.
7. எண்ணுப்பெயர்களில் எவற்றின் முன் வரும் வல்லினம் மிகாது?
8. வேற்றுமையில் ய, ர, ழ, ஈறுகளில் முன் வரும் வல்லினம் மிகுதலுக்குச் சான்று தருக?

**பிரிவு – 3**

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக. (3x15=45)**

1. (அ) மொழி முதல், மொழி இறுதி எழுத்துகள் பற்றிக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) இடைநிலைகள் குறித்துக் கட்டுரை வரைக.

2. (அ) உயிரெழுத்துகளின் பிறப்புப் பற்றித் தொல்காப்பியரும் நன்னூலாரும் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பகுபத உறுப்பிலக்கணம் குறித்துக் கட்டுரை வரைக.

3. (அ) புணர்ச்சியும் அதன் பாகுபாடும் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) இக்காலத் தமிழில் வல்லினம் மிகும் இடங்களும் மிகா இடங்களும் குறித்துக் கட்டுரை வரைக.

***